**ONE TWO ACADEMY**

**12 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 7**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. பின்வருவனவற்றுள் தொன்ம த்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

 அ) கர்ணன் தோற்றான் போ.

 ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

 இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.

 ஈ) இந்தா போறான் தருமன்.

2. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

 அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

 இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

3. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்'-விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

 அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

 ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

 இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

 ஈ) கரிகா லனை, உருத்திரங்கண்ணனார்

4. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்

 அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

5. 'அதிசய மலர்' என்னும் கவிதையின் ஆசிரியர்

 அ) ஆத்மாநாம் ஆ) நாகூர்ரூமி

 இ) தமிழ்நதி ஈ) இரா. மீனாட்சி

6. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது

கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி

இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

7. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும் , பிறருக்குப் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

8. 'காய்நெல் அறுத்து' என வரும் புறநானூற்றுப் பாடலின் பாவகை

அ) கலி விருத்தம் ஆ) அறுச்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) சிந்தியல் வெண்பா

9. சீனத்தில் வழங்கும் யாங்சௌ கதை ............. பற்றியது.

அ) இவ்வுலக வாழ்வை ஆ) நேர மேலாண்மையை

இ) கொல்லாமையை ஈ) சொர்க்கத்தை

10. தோட்டக் கூலிகளாகத் தமிழர்களை வெள்ளையர் சேர்க்குமிடங்கள்

அ) இலங்கைத் தீவு, அந்தமான் தீவு ஆ) மலேசியா, சிங்கப்பூர்

இ) ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஈ) அமெரிக்கா, கனடா

## II <u>எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> **8 X 2 = 16**

11. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

12. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

13. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

14. தொன்மம் - விளக்கம் தருக.

15. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்ப டும் இரு தொடர்களை எழுதுக.

16.உன்மனம் ஒரு பாற்கடல்

அதைக் கடைந்தால்

அமுதம் மட்டுமல்ல

ஆலகாலமும் வெளிப்படும் என்பதை

நீ அறிவாய் அல்லவா? -இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

17.மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

I) ஆற அமர

II) ஆணி அடித்தாற் போல

18.தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

19.**பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

இளங்கோவடிகள் சாத்த னாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார் .

20.அதிசய மலர் என்ற கவிதை தமிழ்நதியின் எத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன?

## III <u>எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> 2 X 4 = 8

21.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்ப னவற்றை எழுதுக

22.அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

23. எங்கிருந்தோ வருகிறது

வண்ணத்துப்பூச்சியொன்று

பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

25.. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

27.சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.